புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

=====================================================================

*கழிமுகம்: சமகாலச் சூழலின் பகடியும் உள்ளொடுங்கிய மனத்தின் எழுச்சியும்*

*முனைவர் வீ.ராஜீவ்காந்தி*
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ்த்துறை, ஆதித்யா மேலாண்மை அறிவியல் மற்றும்*
*ஆராய்ச்சி நிறுவனம் புதுச்சேரி -605 502.*

=====================================================================

*உலக மொழிகளில் எழுதப்பட்ட எந்தவொரு படைப்பாக இருந்தாலும்.அதில் சமகாலத்தின் அரசியல், பண்பாடு, மொழி குறித்த பதிவுகள் இருக்கும்.இவை மட்டுமின்றிச் சமகாலத்தின் ஏனைய புறச்சூழல் சார்ந்த நிகழ்வுகளின் பாதிப்புகளும் இடம்பெற்றிருக்கும்.அவ்வாறு இடம்பெற்றவற்றில் சிலவற்றை மறைமுகமாகவும் நேரடியாகவும் படைப்பாளர்கள் பதிவு செய்வர். இவ்வாறு மறைமுகமாகத் தான் வாழும் சமூகத்தின் செயல்களை அல்லது அரசியலின் அதிகார வெறியைப் பகடி செய்யும் விதமாகவும், கல்வி, வேலைவாய்ப்பு, அரசு அதிகாரிகளின் செயல்பாடுகளைத் தார்மீகக் கோபத்தோடும் அதே நேரத்தில் எவ்விதச் சமரசமுமின்றிப் பகடி செய்யும் சமகாலப் புதினங்களாகக் கழிமுகம், பூனாச்சி ஆகியவை அமைந்துள்ளன. இந்த இரு புதினங்களையும் எழுதிய பெருமாள்முருகனுக்கு முன்பே பாரதியாரும் புதுமைப்பித்தனும் ஞானக்கூத்தனும் சமூகச் செயல்பாடுகளை, அரசியலை, கடவுளை, மிகக் கடுமையாகக் பகடி செய்துள்ளனர். புதுமைப்பித்தனைப் போன்று பண்பாட்டைப் பகடி செய்து படைத்தவர்கள் இல்லை.இந்த வரிசையில் ஒட்டுமொத்தச் சமூக அரசியல் நிலைப்பாட்டைப் பகடி செய்யும் உத்தியைப் பெருமாள்முருகனும் கையாண்டுள்ளார்.*

*கழிமுகம் என்னும் இப்புதினம் முழுவதும் பகடி என்னும் உத்தி முறையில் எழுதப்பட்டுள்ளது. 'பகடி' என்பது நகைச்சுவையுடன் கூடிய விமர்சனத்தை முன்னிறுத்தி செயல்படுவது. விமர்சனம் மூலம் மனிதனையும் அவன் சார்ந்த சமூகத்தையும் நெறிப்படுத்துவது இதன் தலையாய நோக்கமாகும். புதுமைப்பித்தனும் ஞானக்கூத்தனும் தாம் வாழும் சமூகத்தைப் பகடி செய்துள்ளனர். ஞானக்கூத்தனின் கவிதையொன்று இப்படி அமையும். முத்துப் பல்லக்கில் தெய்வம்/ ஊர்வலமாக வந்தால்/ எங்கேயாவது ஓடி ஒளியலாமா? என்று நினைக்கிறேன்.(என் உளம் நிற்றி நீ, 2016:150) என்று கடவுளின் பெயரால் நிகழ்த்தப்படும் பணப்பிடுங்கலைப் பகடி செய்திருப்பார்.அதற்கான சுதந்திரம் அவருக்கு இருந்தது.அவர் வாழ்ந்த நாட்டில் எழுத்துரிமை ஓர் அளவிலாவது இருந்திருக்கும். ஆனால் பெருமாள்முருகன் வாழும் புறவயச் சூழலானது மனிதர் வாழ்வதற்கானது இல்லை.மனிதர்களின் பண்பாட்டை, கல்வியை, சாதியை, மதத்தை, நாட்டைக் குறித்து அவர் எதையும் எழுதவில்லை.அவர் அசுர உலகம் குறித்து எழுதுகிறார்.புதுமைப்பித்தனையும் ஞானக்கூத்தனையும் கடந்து அசுர உலகம் குறித்து நான் அறிந்தவரை இவர் ஒருவரே எழுதியுள்ளார் என்று கருதுகிறேன்.*

*'இலக்கியம் சமூகத்தின் விளைநிலம்' என்று மார்க்சிய அறிஞர்கள் கூறுவார்கள். இங்கு ஒரு படைப்பாளி தான் வாழும் சமூகம் குறித்து எழுதினாலும், 'இந்தச் சமூகம் எனது படைப்பின் கதைக்களம் இல்லை' என்று சொல்ல நேர்ந்ததற்கு எத்தகைய அழுத்தங்களை அரசு கொடுத்திருக்கும் என்பதையும் கவனத்தில்கொள்ள வேண்டும் ( நான் இங்குக் கூறுவது அசுர உலகத்தின் அரசியல் நிலை குறித்து). கல்வி, மருத்துவம் போன்றவற்றை அரசு தனியாரிடம் ஒப்படைத்துவிட்டு மதுவை விற்கிறது.இதற்குமேல் இந்தச் சமூகத்தின் அவலத்தை வேறெப்படிக் கூறமுடியும்? கழிமுகம், பூனாச்சி போன்ற புதினங்களை, இத்தகைய பின்புலச் செய்திகளை எடுத்துரைக்காமல் அவற்றின் படைப்புக் கருத்தியல் நுட்பங்களைப் புரிந்துகொள்ள முடியாது.*

*கழிமுகம் புதினம் நவீன காலத்தின் தொழில்நுட்பத்தை, அபரிமிதமான அறிவியல் வளர்ச்சியைக் கண்டு மிரண்டு நிற்கும் தந்தைக்கும் தொழில்நுட்ப வளர்ச்சியோடு அதன் வேகத்தில் பயணிக்கும் மகனுக்குமான உறவை உணர்வு பூர்வமாக எடுத்துரைக்கிறது. எங்கும் வியாபித்திருக்கும் செல்போன் அதன் அசுரக் கைகளில் அகப்படாதவர்கள் மிகக் குறைவே. அதே நேரத்தில் அதன் பயன்பாடு மிக முக்கியமான ஒன்று என்பதையும் மறுப்பதற்கில்லை. எனினும் அசுர வளர்ச்சியில் ஆன்ட்ராய்டு போன்களின் வருகையை நினைத்துப் பயம்கொள்வதற்கு மிக முக்கியக் காரணம் ஏற்கெனவே உருவாக்கப்பட்ட பண்பாட்டுக் கட்டுபாட்டுக்குள் மனிதனைத் தொடர்ந்து வாழ இப்பன்னாட்டுச் சுரண்டல் நிறுவன அமைப்பு வலியுறுத்தி வருகிறது. அதனடிப்படையில்தான் இப்புதினத்தில் இடம்பெறும் கதாபாத்திரம் கனகாசுரர் பாண்பாட்டை நிலைநிறுத்தும் பணியாளராக இருக்கிறார். அதனால்தான், அவர் வீட்டிற்கு வரும்போதெல்லாம் 'பசங்கள பாத்து வளக்கணும்','படிக்கிறானா இல்லையானு கண்காணிக்க வேண்டும்'(கழிமுகம்,2018:103) எனத் தொடர்ந்து ஆண் குழந்தைகளின் மேல் அவநம்பிக்கையை வளர்க்கும் விதமாகப் பேசுகிறார்.இந்தச் சமூகத்தின் கண்ணோட்டத்தைக் கொண்டே கனகாசுரரின் பாத்திரப் படைப்பையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.*

*'ஒத்தையா இருந்தா நல்லவனாத் தெரிவான். கும்பலாச் சேந்தாக் கொலகூடச் செய்வான்' என்பது போன்ற கூற்றுகள் வெறுமனே பண்பாடு சார்ந்த கருத்தை மட்டும் வலியுறுத்தவில்லை இன்றைய அரசின் போக்கையும் சமூகப் போராட்டங்கள் நிகழும் போது அரசின் செயல்பாடுகள் என்னவாக இருக்கின்றன என்பதையும் விளக்கி நிற்கின்றன. ஒரு பக்கம் பண்பாட்டுக் காவலர்களைக் குறித்த அச்சமும் மறுபுறம் அரசு அதிகாரம் சார்ந்த கட்டுப்பாடுகளுக்குமிடையே வாழும் அசுர உலகில் இன்னும் என்னென்னவோ சிக்கல்கள் உள்ளன. அவற்றை எல்லாம் கண்டு அச்சம் கொள்ளும் ஒரு தந்தையின் மனப்பதிவுகள் இந்தப் புதினம் முழுவதிலும் பதிவாகி உள்ளன.*

*அசுர உலகின் அபரிமிதமான தொழில்நுட்ப வளர்ச்சியில் ஒத்தைக்கு ஒரே மகனை வளர்க்கும் முயற்சியில் ஈடுபடும் ஒரு தந்தை தான் வாழ்ந்த சமூக விழுமியங்களைக் கொண்டு தந்போதைய சமூகத்தைப் பார்க்கவில்லை. அல்லது இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கவில்லை. அப்படிப் பார்த்திருந்தால் இது தலைமுறை இடைவெளிச் சிக்கல் என்று எளிதில் கடந்துவிட்டிருக்க முடியும். ஆனால் இங்குச் சிக்கலுக்குரியது, இத்தனை தொழில்நுட்ப வளர்ச்சியில் மகனை எவ்வாறு ஒரு நேர்க்கோட்டுப் பாதையில் வளர்த்தெடுப்பது என்பதுதான்.மேகாசின் தந்தைக்குத் தொழில்நுட்பத்தின் மீதோ வளர்ச்சியின் மீதோ பயம் இல்லை. ஆனால் இந்தத் தொழில்நுட்பங்கள் மகனைத் தவறான பாதைக்கு இட்டுச் சென்றிடுமோ என்று அச்சப்படுகிறார்.*

*திரைப்படம், வீடியோ விளையாட்டுகள், சமூக வலைத்தளங்கள் என எல்லாவற்றிலும் நன்மைகள் இருந்தாலும்.அவற்றை நோக்கிப் பயணிப்பதில் மனிதர்கள் தயங்குகின்றனர். தொல்காப்பியர் "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"(தொல்.,சொல்.,2019:76) என்பது போல எல்லாச் செயல்களிலிருந்தும் ஏதாவது ஒன்றைக் கற்றுக்கொள்ள முடியும் அல்லது அதிலிருந்து வருமானம் பெறுவதற்கான வழிமுறைகளை தேர்ந்துகொள்ள முடியும். ஆனால், நம்மிடையே இருக்கின்ற சமூக வலைதளங்களை நல்லவற்றிற்குப் பயன்படுத்துவதைவிடப் பிறவற்றிற்கே பெரிதும் பயன்படுத்துகிறோம் என்பது எல்லோரும் அறிந்ததே.இந்தப் புதினத்தில் இரண்டு மிக முக்கியமான தகவல்கள் உள்ளன. ஒன்று அகவயமான அச்சம். இரண்டு புறவயமான அச்சம் அகவயமானது தவறே செய்யாத மகன் எங்கே வழி தவறிச் சென்றிடுவானோ என்று மனத்துள் நினைத்து வருந்துவது. புறவயமானது சமூகம் சார்ந்தது. தந்தையிடம் அதிகம் பேசாதவன் வரிசையான கேள்விகளுக்கு ஒற்றைப் பதில் சொல்லும் மகன் என, தந்தை மகனுக்கு இடையே நிலவும் உறவில் இறுக்கமான மனநிலை நிலவிக்கொண்டிருப்பதை உணரமுடிகிறது. இதை மையமாகக் கொண்டு தந்தை மகன் எனும் உறவில் நிலவும் இருவருக்கும் இடையேயும் ஒருவகை இடைவெளி மீதான நம்பிக்கை இல்லாதநிலை உருவாகிறது.இதைப் பின்வரும் கூற்றிலிருந்து அறியலாம்."நான் வெளையாடிக்கிட்டு இருக்கறன்னு ஆருப்பா உனக்குச் சொன்னா? காலேஜ் போகலீன்னு சொன்னது யாரு? நீ வந்து பாத்தியா? நான் காலேஜ் போயிட்டு லேப் அட்டண்ட் பண்ணிட்டு இப்பத்தான் வந்து மெஸ்ல டீ குடிச்சிட்டு ரூமுக்கு வந்தன்.இப்ப நேரம் என்ன?நீ ஆபிஸ் முடிஞ்சு வீட்டுக்கு வந்திருக்கறாப்பலதான் நானும் காலேஜ் முடிஞ்சு ரூமுக்கு வந்திருக்கறன்.என்னயப் படிக்க விடுப்பா." (கழிமுகம்,2018:86) ஆனால் தாய்*

*மங்காசுரியின் நிலை அவ்வாறு இல்லை.பெற்ற தாய் தன் மகன் மேல் அதீத அன்பு கொண்டவராக, மகன் செய்கின்ற அல்லது நடந்துகொள்ளும் முறைமீது சந்தேகம் இல்லாதவராக இருக்கிறார். என்றாலும் மகன் உடுத்தும் ஆடைகளைக் குறித்தும் அவனுடைய சிகை அலங்காரம் குறித்தும், அவன் சேர்ந்து பயில்கிற கல்லூரியில் ஆண், பெண் இருபாலரும் சேர்ந்து உணவருந்தும் நடைமுறைகள் குறித்தும் அத்தாயின் உள்ளம் பதற்றமடைகிறது. தாய், தந்தை இருவரும் கல்லூரியில் ஆண், பெண்களின் தயக்கம் சிறிதுமில்லாத நட்புநிலையைக் கண்டு பதற்றமடையும்போது, மகன் ஓர் ஒற்றைச் சிரிப்பில் அவை எல்லாவற்றையும் கடந்து போய்விடுகிறான் அல்லது இங்கு அப்படித்தான் இருக்கும் அதை, நான் பார்த்துக்கொள்கிறேன் என ஒற்றை வரியில் முடித்துக் கொள்கிறான். இந்த உரையாடலை அல்லது காட்சிப் படிமத்தை அப்படியே அரசிற்கும் மக்களுக்குமானதாகப் பொருத்திப் பார்க்க முடியும்.*

*மக்கள் ஒன்று சேர்ந்தால் அரசு அச்சப்படுவதும், படைப்பாளி எழுதும்போது புரட்சி வெடித்து விடுமோ என்று பதற்றம் கொள்வதும் குமராசுரர் தற்படம் எடுக்கும்போது என்ன ஆகுமோ? ஆபாசப் படங்களைப் பார்ப்பானோ? குளியலறையில் பெண்களைப் படம் எடுக்கும் தவறைச் செய்துவிடுவானோ? என அச்சம் கொள்வதும் ஒன்று போலவே இருக்கின்றன. மகனுக்குச் செல்போன் வாங்கிக் கொடுத்தால் அவன் கெட்டுப் போய்விடுவான் என்ற எண்ணம் அவருடைய ஆழ்மனத்தில் பதிந்து அவரைப் பாடாய்ப் படுத்தித் தொலைக்கிறது.இதற்குக் காரணம் அவருடன் பணியாற்றுபவர்களும் சமூக நிறுவனங்களும் தொடர்ந்து செல்போன் குறித்தும் கணினி குறித்தும் எதிர்மறையான பிம்பங்களைக் கட்டமைப்பதுதான்.ஆனால் இந்த எதிர்மறை பிம்பந்திலிருந்து அவரை வெளியே கொண்டுவரும் அவர் நண்பரின் முயற்சி வேறுவிதமானது.*

*“இண்டர்நெட்டுனு ஒரு பூதத்தக் கொண்டாந்து அசுரலோகம் முழுக்க எறக்கி உட்ருக்காங்க. அது செல்போன்லயும் கம்புயூட்டர்லயும் ஏறிக்கிட்டு லோகத்தையே ஆட்டுவிக்குது”(கழிமுகம்,2018:169) என்று குமராசுரர் கூறும்போது அதை நண்பர் ஏற்றுக்கொள்கிறார். இங்கே இருவரும் ஒத்த வயதுடையோர் அல்லது நண்பர் என்ற முறையில் மறுப்பேதும் இருவரும் கூறுவதில்லை. ஆனால் இதே போன்று மகன் தந்தைக்குப் பிடித்தமான ஒரு பாடலை செல்போனில் ஒலிக்கச் செய்து கேட்கும்படி கூறும்போது அவர் மறுக்கிறார். தந்தை மகன் உறவு என்ற நிலைமாறி, மகன் சொல்ல நாம் கேட்பதா? எனத் தந்தையின் அதிகாரமும் இங்கே தலைதூக்கி இருப்பதாக உணரமுடிகிறது.*

*இந்தப் புதினம் குறியீட்டுத் தன்மையில் அமைந்திருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.ஏற்கெனவே கூறியது போல, சில தகவல்களைக் கேலி அல்லது அங்கதத்தில் அமைத்த படைப்பாளர் சில தகவல்களைக் குறியீட்டு அடிப்படையிலும் அமைத்துள்ளார். உதாரணமாக, மகனைக் கல்லூரியில் சேர்க்கச் செல்லும்போது ஒவ்வொரு கல்லூரியும் தனக்கென்று சில விதிமுறைகளை வைத்திருக்கும். அந்த விதிமுறைகளைக் ‘கடிவாளம்’ என்று குறிப்பிடுகிறார். இந்தக் கடிவாளங்கள் பல வண்ணங்களில் கிடைக்கும் என்றும் கூறுகிறார். ஒவ்வொரு தந்தையும் தன் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு கடுமையான விதிமுறைகள் கொண்ட கல்லூரியையே தேர்ந்தெடுக்கின்றனர். காரணம் தவறு செய்வதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கும்.பையன் கெட்டுப்போக மாட்டான் என்ற நம்பிக்கை ஆழமாக ஊன்றப்பட்டுவிட்டதே ஆகும்.*

*இத்தைகைய நம்பிக்கைகளின் மீதான அடிப்படைகள் தந்தை, மகனுக்கு இடையே முரணான ஓர் இடைவெளியே உருவாக்கி விடுகின்றன.கட்டுக்கோப்பாக மகனை வளர்க்க நினைக்கும் தந்தை தன் மகனுக்குத் தான் செய்வதெல்லாம் பிடிக்கும் என்றே கருதுகிறார்.தான் இவ்வாறு செய்வது தன் மகனுக்குப் பிடிக்குமா? பிடிக்காதா? என்றுகூட அவருக்கு எண்ணிப்பார்க்கத் தெரியவில்லை மகனிடம் விவாதிப்பதும் இல்லை.இத்தகைய சூழலில் பெற்றோர்களை மிக முக்கிய இடங்களில் பழிவாங்க, பிள்ளைகள் தயங்குவதும் இல்லை.கல்லூரிகளில் விதவிதமான அடையாள அட்டைகள் உண்டு.இவை மாணவர்களுக்குக் கடிவாளம் போன்றவை.இந்தக் கடிவாளம் பன்னாட்டு வேலைவாய்ப்பைப் பெறும் நோக்கோடு உருவாக்கப்பட்டது.பெற்றோர் தம் பிள்ளைகள் அடையாள அட்டை அணிந்திருப்பதையே விரும்புகின்றனர்.இதை உடைக்கும் நோக்கில் “பிய்யச் சும்மா குடுத்தா அதையும் தின்னுருவியா” (கழிமுகம்,2018:106) என்று எழுப்பப்படும் குரல் ஒட்டுமொத்தத் தந்தையர்களை நோக்கி வீசப்படுவதாக உள்ளது.*

தந்தைக்கும் மகனுக்குமான உறவு நிலை என்ற நிலையைத் தாண்டி இந்தப் புதினம் மிக முக்கியமாகச் சமூக நிலைகளைக் குறித்து மிக விரிவாகவே பேசுகிறது.கல்வி, அரசுப்பணி, நவீனத் தொழில் நுட்பங்கள் என அனைத்தையும் மிக விரிவாக ஆராய்ந்து எழுதி இருப்பதாகப் புதினம் உள்ளது.கல்வி பன்னாட்டு நிறுவனங்களினால் வியாபாரமாக உருமாறியுள்ளது.முதல் மதிப்பெண் என்ற நிலையை உருவாக்கி அதில் கொள்ளை அடித்தல் இயல்பான ஒன்றாயிற்று.அதற்கடுத்த நிலையில் கல்லூரியில் கொள்ளை எனச் சமூகத்தின் எதார்த்த நிலை விரிவாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது.பன்னாட்டு நிறுவனத்தில் அதிகச் சம்பளத்தில் பணி கிடைக்க வேண்டும் என்று நல்ல கல்லூரியைத் தேர்ந்தெடுக்கும் முயற்சியில் பிள்ளைகளைப் பெற்றவர்கள் ஈடுபடுத்துகின்றனர்.இவை எல்லாவற்றையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது. மதிப்பெண்களை மட்டுமே இலக்காகக் கொண்டு போராடும் குழந்தைகள் பன்னாட்டு நிறுவனத்தில் உயர் பணியாளர் என்ற பணியைப் பெறுவதனால் குமாராசுரருக்குக் கண் வீங்கிச் சிவத்தல் என்பது பண்பாட்டுக் காவலர்களின் கண்கள் சிவந்து வீங்கிப் போனதாகவே கருத வேண்டும். இது, ஜெயகாந்தனின் அக்னிப்பிரவேசம் நாவலில் கங்காவின் தலையில் தண்ணீர் ஊற்றி தீட்டுக் கழிப்பது போன்றதில்லை.அதை நல்ல நீரில் கழுவ முடியாது.மாறாகச் சமூகத்தைப் பார்க்கும் நமது கண்ணில் தான் மொத்த அழுக்கும் உள்ளது. மக்கள் பேசுவதும் எழுதுவதும் அரசுக்கு எதிராகப் போராட்டம் நிகழ்த்துவதும் சாதி மறுப்பு, கடவுள் மறுப்புப் போன்றவையும் அசுர லோகத்தில் அரசுக்கு எதிரானவையாகக் கருதப்படுகின்றன. எனவே சமூகத்தின் மாற்றங்களைக் கண்டு அஞ்சும் பண்பாட்டுக் காவலர்களின் கண்கள் வீக்கமடைகின்றன என்ற கோணத்தில் புதினத்தின் பொருளை விளங்கிக்கொள்ள வேண்டும்.

இந்தப் புதினத்தின் மையப்பகுதி என்பது ஒன்றில்லை. அது பல்வேறு கிளைத் தன்மைகளைக் கொண்டுள்ளது. தந்தைக்கும் மகனுக்குமான உறவு, கணவனுக்கும் மனைவிக்குமான உறவு, தனி மனிதனுக்கும் சமூகத்துக்குமான உறவு எனப் பலநிலைகளில் புதினம் அலசிச் செல்லும் சமூக நிலைகளைப் பகுத்துக் காண வேண்டும். அதுதான் இந்தப்புதினத்தின் தனித்தன்மை.அதாவது புதினம், ஒற்றைப் பொருள் சார்ந்தது இல்லை. அது பல்வேறு முகங்களைக் கொண்டுள்ளது. சமூகம் என்று கூறும்போது மற்ற அனைத்தும் அதற்குள்ளே அடங்கும்தானே சமூகம் என்று தனித்துக் கூற முடியுமா? என்ற வினா எழுமாயின் அதற்கு அகமனக் குரல்கள் பண்பாட்டுப் புரிதல்கள், குறியீடுகள் போன்றவை தனித்து நிற்பதாகவே கருதப்பட வேண்டும் என்ற முடிவு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

தந்தைக்கும் மகனுக்குமான பிணக்கு அல்லது பிணக்குப் போன்றதொரு பாவனை நாவலின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை பயணிக்கிறது.இதற்கு இடையில் கட்டப்படும் கதை நிகழ்ச்சிகளுக்கான காரணக் காரிய நிகழ்வுகள் பொருத்தமானவையாகவே விரிவடைகின்றன.மகன் மீது கொண்ட அன்பினால் கணவனைவிட மகனின் பேச்சைக் கேட்டு நடப்பவராகவே தாயின் பாத்திரம் கட்டமைக்கப்பட்டுள்ளது.அதைவிட, குடும்பத்தில் முக்கியப் பங்கு வகிப்பவராகப் படைக்கவில்லை.இது சமகாலத்தில் பெண்கள் குடும்பத்தில் இருக்கும் நிலை குறித்து அறிந்துகொள்ள உதவுகிறது. மேலும் குழந்தை பிறந்தவுடன் கணவனுக்கும் மனைவிக்குமான உறவுநிலை என்பது வெறுமனே பணிவிடைகள் மேற்கொள்வது என்ற நிலையோடு சுருங்கிக்கொள்கிறது என்பதையும் இப்புதினம் எடுத்துரைக்கிறது.

பெரும் உறவுகளோ நண்பர்கள்களோ அதிகமின்றித் தனது வாழ்க்கையைச் சுருக்கிக் கொண்டு வாழும் ஒரு சராசரி மனிதன். அவர் உயர் அதிகாரி இல்லை.அதிக லஞ்சம் புழங்கக் கூடிய துறையிலும் பணியாற்றவில்லை.கோடான கோடி மக்கள் வாழும் இந்தச் சமூகத்தில் அவர் தனித்த மனிதராகவே வாழ்கிறார்.நடைப்பயிற்சி மேற்கொள்ளும் இடத்தில் அவருக்கு அதிகப்படியான நண்பர்கள் யாருமில்லை.தான்உண்டு தன் வேலை உண்டு என்று வாழும் குமராசுரர் உலகம் தன் பணி, மனைவி, மகன் என்று மட்டுமேயாகி இந்தச் சமூகத்தில் உள்ளொடுங்கி வாழ்கிறார்.அவருக்கு முன்பு நிகழும் அபரிமிதமான அறிவியல் வளர்ச்சி அவரை நிலையிழக்கச் செய்கிறது.இதற்குக் காரணம் மருத்துவத் துறையை அவரின் சொல்படி தேர்ந்தெடுத்திருந்தால் இத்தகைய சிக்கல் தோன்றி இருக்குமா? என்பதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.எங்கே மகன் தான் நேசித்த துறையைத் தேர்ந்தெடுக்காததால் தேறமாட்டானோ என்ற அச்சம் கணவன் மனைவி இருவருக்குமே ஏற்பட்டுவிடுகிறது. இந்த அச்சம்தான் கல்லூரியின் விதிமுறைகள் கடுமையாக இருக்கும் இடத்தைத் தேடுதல், செல்போன் வாங்கித் தரத் தயங்குதல், ஆண், பெண் சேர்ந்து உணவருந்துவதைக் கண்டு நடுங்குதல், தலைமுடியைக் கண்டு

பதற்றமடைதல் எனப் பல்வேறு கோணங்களில் பெற்றோரின் பதற்றத்தை அதிகரிக்கச் செய்கிறது.

புதினத்தின் திருப்புமுனையாக அமைவது குமராசுரரும் அவரது நண்பர் அதிகாசுரரும் சந்திக்கும் பகுதிதான்.அவர் மனமாற்றம் அடைவதற்கு வலுவான காரணமாக அமைவது எது? என்பது குழப்பத்தைத் தருகிறது. ஏனெனில் கணினியில் பாடல் கேட்டல், செல்போனில் விரும்பிய பாடல் கேட்டல் என்று மகனிடமும் நண்பரிடமும் ஒரே மாதிரி நடந்து கொண்டாலும் நண்பரின் செய்கை அவருக்குத் தன் வயதொத்த நண்பரின் செய்கை மட்டுமே அவருக்கு உவப்பளிப்பதாக இருக்கிறது. இந்த இடம் மாற்றத்திற்குக் காரணமாக அமைகிறதா? அல்லது கடலுக்குக் குமராசுரர் செல்லும்போது வழியில் பல்வேறு மனிதர்களையும் உயிர்களையும் பார்க்கிறாரே, அங்கு ஏற்படுகின்ற மாற்றமா என்றெல்லாம் எண்ணிப் பார்க்க புதினம் இடம் தருகிறது. அவர் கடலில் குளிக்கும் போது இத்தனை நாட்கள் கிணற்றுத் தவளையாக இருந்துவிட்டோமே என்ற எண்ணமும் அவருக்குச் சட்டென உதித்திருக்கலாம்.இத்தகைய சூழலில் கடலோடு ஆற்றுநீர் கலத்தல் என்ற இடம் மிக முக்கியமானது.ஆற்றுநீர் எவ்வளவுதான் சுவையாக இருப்பினும் அது கடலோடு சேர்ந்தே ஆக வேண்டும் என்ற தத்துவநிலை அல்லது உலகோடு ஒட்டி வாழ் என்ற பழமொழியின் நீதியா?எது குமராசுரரின் மனமாற்றத்திற்குக் காரணமாக அமைந்திருக்ககூடும்.

குமராசுரர் வருந்துவதெல்லாம் செல்போனில் உலகத்தை வைத்திருக்கலாம், வழித்தடங்கள், உணவு வகைகள், பேருந்து, சினிமா முன்பதிவுகள் எனச் சகல வசதிகளையும் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் சாலை ஓரத்தில் நின்றிற்கும் மரங்களையும் கூடடையும் பறவைகளையும் காணாது கழிகின்ற இந்த வாழ்க்கையின் சூன்ய நிலையை என்ன செய்வது என்ற ஏக்கத்தை முன்னிருத்தியே என்றும் கொள்ளலாம். ஆனால் இதை மட்டும் நிறுவுவது இப்புதினத்தின் நோக்கமாக இருக்க வாய்ப்பில்லை.கழிமுகம் என்பது பல தரப்பு நதிகளையும் காட்டாற்று வெள்ளத்தையும் ஒன்றிணைக்கும் வல்லமை கொண்டது.எல்லாவற்றையும் ஒன்றொடு மற்றொன்றை இணைக்க வைக்கும் தன்மை அதற்கு உண்டு. அதுபோல உலக மக்களின் பண்பாடுகள், தனிமனிதக் கட்டுப்பாடுகள, ஆசாபாசங்கள் எல்லமே வெவ்வேறாக இருந்தாலும் உலகமயமாக்கல் சூழல் நம்மை ஒரு குடையின்கீழ்க் கொண்டு சேர்க்கும் அராஜகப் போக்கும் உள்ளது. இதற்கு மாற்றாகத் தனிமனிதக் கட்டுப்பாடுகள், பண்பாட்டு இறுக்கங்கள் மதிப்பெண், பன்னாட்டு வேலை இவை ஏதுமற்று எல்லாவற்றையும் களைந்து மனிதன் மனிதனாகச் சுதந்திரமாக வாழ ஆசைக்கொள்ளும் உள்ளொடுங்கிய மனத்தின் வெளிப்பாடாகவும் இந்தப் புதினத்தை விளங்கிக்கொள்ள முடியும்.

பாரதியார் முதல் நவீன காலப் படைப்பாளர்கள் வரை சமூக அநீதிக்கு எதிராக அதிகார அரசியலுக்கு, அடக்குமுறைக்கு எதிராகப் பெரும் படைதிரட்டிப் போராடவில்லை.அவர்கள் தங்களின் எழுதுகோலைப் பெரும் ஆயுதமாகக் கருதினர்.இதுவும் ஒருவகை எதிர்வினை அல்லது போர்முறை என்றும் கூறலாம். ஏனெனில் ஆயுதம் ஏந்தி எதிரெதிராகப் போரிடுவது மட்டும் வீரம் இல்லை மணிமேகலை போன்று அடக்குமுறை அரசுக்கு எதிராக அமைதியான முறையில் அறம் உரைத்தல்கூட வீரம் சார்ந்ததாகவே நவீன காலக் கோட்பாடுகள் எடுத்துரைக்கின்றன. இத்தகைய பின்புலத்ததையெல்லாம் மையமாகக்கொண்டு இந்தப் புதினத்தை வாசிக்கும்போது சமகாலத்தின் அரசியல் நிலையை விளங்கிக்கொள்ள உதவுவதாகவும் மதச்சார்பற்ற சனநாயகத்தை மீட்டெடுக்கும் உள்ளொடுங்கிய ஒரு மனத்தின் எழுச்சியாகவும் கழிமுகம் புதினம் அமைந்துள்ளது.

பயன்பட்ட நூல்கள்

1.அடிகளாசிரியர்.,தொல்காப்பியம் சொல்லதிகாரம், இளம்பூரணர் உரை, தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியீடு,தஞ்சாவூர்,முதற்பதிப்பு:2019

2.ஞானக்கூத்தன்.,என் உளம் நிற்றி நீ, காலச்சுவடு பதிப்பகம்,சென்னை, இரண்டாம் பதிப்பு: டிசம்பர் 2016.

3.பெருமாள்முருகன்.,கழிமுகம்,காலச்சுவடு பதிப்பகம்,சென்னை, முதல் பதிப்பு: டிசம்பர் 2018.

********* ********* ********** ********* ********* ********** ********** **********